மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

2023 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்07ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873ம் ஆண்டு 11ஆவது ஏற்பாட்டின்படி திருமதி.தீபா உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

OS.No. 115/2020 வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | |
|---|---|
| பெயர் .. கிருஷ்ணவேணி | வயது ..67 |
| க/பெ .. ஜெகன்நாதன் | சாதி .. |
| கிராமம் .. தற்போது சென்னை | சமயம் .. |
| தாலுக்கா .. | தொழில் .. |

**வா.சா. 1 ( முதல் விசாரணை )**

நான் இந்த வழக்கில் வாதி. நான் எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். படித்துப்பார்த்துதான் கையெழுத்துப்போட்டேன். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1. 05.09.1982 தேதியிட்ட எனக்கும் ஜெகன்நாதன் என்பவருக்கும் நடைபெற்ற திருமண பத்திரிக்கை நகல் அசல் **வா.சா.ஆ.1 ஆகவும்**

2. 01.01.1995 தேதியிட்ட என்னுடைய பெயரில் உள்ள வாக்காளர் அடையாள அட்டை **வா.சா.ஆ.2 ஆகவும்**

3. 2017ம் வருடத்திற்கான குடும்ப அட்டை **வா.சா.ஆ.3 ஆகவும்**

4. என் பெயரில் உள்ள ஆதார் அட்டை நகல் **வா.சா.ஆ.4 ஆகவும்**

5. நானும் என் கணவரும் எடுத்துகொண்ட புகைப்படங்கள் மூன்று வரிசை **வா.சா.ஆ.5 ஆகவும்**

6. 01.03.2020 தேதியிட்ட ஜெகன்நாதன் அவர்களின் இறப்பு சான்றிதழ் **வா.சா.ஆ.6 ஆகவும்**

7. 30.09.2020 தேதியிட்ட ஜெகன்நாதன் அவர்களின் வாரிசு சான்றிதழ் **வா.சா.ஆ.7 ஆகவும்**

8. 07.10.2020 தேதியிட்ட மூன்று மட்டும் நான்காம் பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு **வா.சா.ஆ. 8 ஆகவும்**

9. மேற்கூறியவாறு மூன்று மட்டும் நான்காம் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டதற்கான அஞ்சலக அட்டை **வா.சா.ஆ. 9 ஆகவும்**

**1 ,2ம் பிரதிவாதி வழக்கறிஞர் வா.சா.ஆ.1 முதல் 5 மற்றும் 8 மற்றும் 9 ஆவணங்கள் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.**

*Taken down by me in open Court read over to the witness and acknowledged by him/her to be correct.*

*Sdl/-B.Salma.*

*District Munsif,*

*Polur.*